# 18. கஷ்டப்பட்டு வேலை செய்வோம்



மகன் : அம்மா இன்று சோறு மிகவும் உருசியாக இருக்கிறது.

அம்மா : அந்தச் சோறும் கறியும் நான் சமைத்தேன். ஆனால் இவற்றைப் பலர் கஷ்டப்பட்டு எங்களுக்குப் பெற்றுத் தருகிறார்கள்.

மகன் : அவர்கள் யாரம்மா ?

அம்மா : ஏன் மகனே ! உழவுத்தொழில் செய்பவர்கள் மீன் பிடிப்பவர்கள்.

மகன் : அது எப்படி ?

அம்மா : உழவுத் தொழில் செய்பவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்து நெல்லைப் பெற்றுத் தருகிறார்கள்.



அப்பா : மீன்பிடிப்பவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மகன் : மீன் பிடிப்பதற்கு ஆழ் கடலுக்குச் செல்லுவது மிகவும் பயங்கரமான காரியம் அல்லவா அப்பா.

அப்பா : ஆம் மகனே. ஆனால் அவர்கள் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவர்கள் எங்களுக்காக மீன்பிடிப்பதற்கு ஆழ்கடலுக்குப் போகிறார்கள்.

அம்மா : கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களை இறை தந்தை அன்பு செய்கிறார். நாங்களும் அவர்களுக்கு அன்பு செய்வோம்.